செ.வெ.எண் : 331 நாள் : 06.06.2011

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இன்று (6.6.2011) தலைமைச் செயலகத்தில் 2010–2011 ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாணவர்கள் கல்வி கற்று வாழ்க்கையில் மென்மேலும் உயர்ந்து, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் நல்ல குடிமகன்களாக உயர பல நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், +2 பொதுத் தேர்வில் முதலிடத்தைப் பிடித்த ஒரு மாணவருக்கு 50,000 ரூபாயும், இரண்டாம் இடம் பிடித்த ஒரு மாணவருக்கு 30,000 ரூபாயும், மூன்றாம் இடம் பிடித்த நான்கு மாணவர்களுக்கு தலா 20,000 ரூபாய் வீதம், 80 ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் 6 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டினார்கள்.

பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் (SSLC) முதலிடத்தைப் பிடித்த ஐந்து மாணவர்களுக்கு தலா 25,000 ரூபாய் வீதம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் இடம் பிடித்த 10 மாணவர்களுக்கு தலா 20,000 ரூபாய் வீதம், 2 லட்சம் ரூபாயும், மூன்றாம் இடம் பிடித்த 24 மாணவர்களுக்கு தலா 15,000 ரூபாய் வீதம், 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 39 மாணவர்களுக்கு, 6 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டினார்கள்

அதைத் தொடர்ந்து, பத்தாம் வகுப்பு மெட்ரிக்குலேஷன் தேர்வில் முதல் இடத்தைப் பிடித்த மூன்று மாணவர்களுக்கு தலா 25,000 ரூபாய் வீதம், 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் இடம் பிடித்த 10 மாணவர்களுக்கு தலா 20,000 ரூபாய் வீதம், 2 லட்சம் ரூபாயும் , மூன்றாம் இடம் பிடித்த 20 மாணவர்களுக்கு தலா 15,000 ரூபாய் வீதம், 3 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 33 மாணவர்களுக்கு 5 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த கல்வியாண்டில் (2010-2011) நடைபெற்ற அரசுப் பொது தேர்வுகளில் மாநில அளவில் முதல்

மூன்று இடங்களைப் பிடித்த மொத்தம் 78 மாணவர்களுக்கு 14 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி, மாணவர்கள் மேலும் கல்வியில் சிறந்து விளங்கி, அதன் வழி நின்று அறிவுடன் கூடிய நன்னடத்தை, நல்லொழுக்கம் ஆகிய பண்புகளுடன் வாழ்வில் மேலும் உயர வாழ்த்தினார்கள்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, தன்னம்பிக்கை, விடா முயற்சி ஊட்டி சாதனை படைக்க வைத்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ரொக்க பரிசையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்ட மாணவர்களும், அவர்கள்தம் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் அளித்துப் பாராட்டி ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 6.6.2011